பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | வைகாசி 24 | வியாழக்கிழமை | 06.06.2024 | அதிர்வு 310

## சீரற்ற காலநிலை:
# சாவு எண்ணிக்கை 30 ஆக அதிகரிப்பு



இலங்கையில் சீரற்ற காலநிலையால் உயிரிழந்தவர்களின் 07

# தியாகி சிவகுமாரனை நாடாளுமன்றில் நினைவேந்திய கஜேந்திரன்

தியாகி பொன். சிவகுமாரனை நாடாளுமன்றத்தில் நினைவு கூர்ந்து உரையாற்றினார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் எம்.பி.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கல்வி நடவடிக்கைகள் தொடர்பான பிரச்சினை குறித்த சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "சிங்களப் பேரினவாதத்துக்கு எதிராகப் போராடிய மூத்த மாவீரரான தியாகி பொன். சிவகுமாரனுக்கு எமது அஞ்சலியைத் தெரிவித்து 06



# மோடிக்குத் தொலைபேசியில் வாழ்த்துத் தெரிவித்த ரணில்

## சனியன்று பதவியேற்பு நிகழ்விலும் பங்கேற்பு



**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்குத் தொலைபேசி அழைப்பில் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தேர்தல் வெற்றிக்கு வாழ்த்துத் தெரிவித்தார்.**

**அத்தோடு அந்த உரையாடலின்போது, இந்தியப் பிரதமர் மோடி தனது பதவியேற்பு விழாவுக்கு இலங்கை ஜனாதிபதி ரணிலுக்கு அழைப்பு விடுத்தார்.** 06

# தேசிய கல்வி நிறுவகத்தில் தமிழருக்கு எதிரான இனவாதம்

## சபையில் கல்வி அமைச்சரிடம் மனோ சுட்டிக்காட்டு

"உங்கள் கல்வி அமைச்சின் கீழ்வரும் தேசிய கல்வி நிறுவகத்தில் பணிப்பாளராகப் பணி புரியும் கலாநிதி. எஸ். கருணாகரன் மீது பாரபட்சம் காட்டப்பட்டு, அவர் தனது பணியைச் செய்ய விடாமல் அவருக்குத் தொல்லை கொடுக்கப்படுகின்றது. உடனடியாக இதைக் கவனியுங்கள். அவர் இப்போது பாதுக்கவில் அமைந்துள்ள தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி நிர்வாக அபிவிருத்தி திணைக்களத்தில் பணிப்பாளராகப் பணி செய்கின்றார். இங்கே என்ன பிரச்சினை? அவர் ஒரு தமிழர். மலையகத் தமிழர். இதுவா பிரச்சினை?"

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் நேற்று நாடாளுமன்றத்தில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவிடம் கேள்வி எழுப்பினார். 06



# மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்ட உள்ளூராட்சி தேர்தல் குறித்த வழக்கு



எத்தனை தடைகள் ஏற்பட்டாலும் சுதந்திரமாகவும் நீதியாகவும் தேர்தலை நடத்துவது தேர்தல்கள் ஆணைக்குழுவின் பொறுப்பு என்று பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய உயர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

உள்ளூராட்சிசபைத் தேர்தலை நடத்தாததன் மூலம் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளது என்று உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட 07




அரசமைப்பு ஏற்பாடுகளின் படி இன்னும் 104 முதல் 135 நாள்களுக்குள் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி முடிக்க வேண்டும். சராசரியாகப் பார்த்தால் இன்னும் நான்கு மாதங்களே உள்ளன.

தேர்தலில் களமிறங்குவதா, எந்த அணியில், எப்படிக் களமிறங்குவது என்று தெரியாமல் தடுமாறிக் கொண்டிருப்பவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டும்தான். இப்படியே கடைசி வரை இருந்து விட்டு, மைத்திரிபால சிறிசேன போல இறுதியில் அடுத்த தேர்தலில் இறங்காமல் அவர் ஜாகா வாங்கி விட்டாலும் 06



# கீரிமலை ஜனாதிபதி மாளிகைப் பகுதி கடந்த மாதம் இரகசியமாக நில அளவை

(ந.லோகதயாளன்)

கீரிமலை ஜனாதிபதி மாளிகை பிரதேசத்தில் எவருக்கும் தெரியாது இரகசியமாக நில அளவைப் பணிகள் இடம் பெற்றுள்ளன.

தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள ஜே/233 கிராம சேவகர் பிரிவில் தனியாருக்குச் சொந்தமான நிலம் மற்றும் சைவ அடையாளங்களை அபகரித்து மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் இரகசியமாக ஜனாதிபதி மாளிகை அமைக்கப்பட்டது. இந்த ஜனாதிபதி மாளிகை கோட்டபாய ராஜபக்ஷவின் காலத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டு நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக கடந்த ஆண்டு தனியார் பல்கலைக் கழகத்துக்கு 50 ஆண்டுகள் குத்தகைக்கு ஒப்பந்தம் எழுதப் பட்டது.

இந்தநிலையில், தனியார் காணிகளைச் சுவீகரிப்பு செய்வதற்காக யாழ்ப்பாணம் நில அளவைத் திணைக்களம் 5 தடவைகள் முயன்றபோதும் நில உரிமையாளர்கள், பொது அமைப்புக்கள் மற்றும் அரசியல்வாதிகளால் தொடர்ச்சியாகத் தடுக்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக தம்மால் அளவீடு செய்ய முடியவில்லை என்று யாழ்ப்பாணம் நில அளவைத் திணைக்களம், நில அளவைத் திணைக்கள தலைமைப் பணிமனைக்கு அறிவித்திருந்தது.

இதையடுத்து கொழும்பு தலைமைப் பணிமனையில் இருந்து கடந்த மாதம் 16 ஆம் திகதியன்று வருகை தந்த உத்தியோகத்தர்கள் கடற்படையினரின் பாதையின் ஊடாக உள்நுழைந்து அந்தப் பிரதேசத்தை முழுமையாக அளவீடு செய்து பணிகளை நிறைவு செய்து அந்தப் பகுதி கிராம சேவகர்களிடமும் ஒப்பம் பெற்றுச் சென்றுள்ளனர்.

இவை தொடர்பில் யாழ்ப்பாணம் நில அளவைத் திணைக்களத்தினரிடம் எந்தவொரு தகவலோ அல்லது அளவீட்டு வரை படமோ இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

# வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் கஞ்சாவுடன் இருவர் நேற்று கைது!



(ந.லோகதயாளன்)

இரண்டு கோடி எண்பது இலட்சம் ரூபா பெறுமதியான கஞ்சாவுடன் வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் நேற்று இருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் இருந்து கஞ்சா கடத்தி வருவதாகக் கடற்படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் பேரில் கடற்படையினர் மேற்கொண்ட தேடுதலின்போதே இந்தக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இதன்போது 70 கிலோகிராம் கஞ்சாவைக் கைப்பற்றிய கடற்படையினர், மேலதிக சட்ட நடவடிக்கைக்காகக் கஞ்சா மற்றும் சந்தேகநபர்களைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.







## தமிழ்ப் பொது வேட்பாளர் வேண்டுமா?

# சுமந்திரனின் பகிரங்க கலந்துரையாடலை எதிர்க்கின்றது தமிழ் மக்கள் பொதுச் சபை

**(பிரபாகரன் டிலக்சன்)**

தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பான பகிரங்க கலந்துரையாடலை நிராகரிப்பதாக தமிழ் மக்கள் பொதுச் சபை அறிவித்துள்ளது.

பொது வேட்பாளர் விடயம் தொடர்பில் சிவில் சமூக அமைப்புக்களுக்கிடையிலான சந்திப்பு நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது சுமார் 100 பொது அமைப்புகள் ஒன்றிணைந்து தமிழ் மக்கள் பொதுச் சபை எனும் கட்டமைப்பை ஸ்தாபித்தனர். இதன் பின்னர் ஊடகச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில், “தமிழ் பொது வேட்பாளர் தொடர்பான பகிரங்க கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் ஒன்பதாம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அதில் பங்குபற்றுவீர்களா?” என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் பதிலளிக்கையில்,


“ஒன்பதாம் திகதி நடைபெறவுள்ள பகிரங்க கலந்துரையாடலுக்கு எங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. எனினும், நாம் அதனை நிராகரிக்கின்றோம்.

பொது வேட்பாளர் தேவையா? இல்லையா? என்பதைக் கடந்த 2019 ஆம் ஆண்டே பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பில் தமிழ் மக்கள் பேரவையால் தேர்ந்தெடுக்கப்பட்ட குழு ஆராய்ந்துவிட்டது. அக் குழு ஒரு கட்டத்தின் இயங்கவில்லை என்பது வேறு விடயம். ஆனால், பொது வேட்பாளர் வேண்டுமா? இல்லையா? என்ற விடயம் ஏற்கனவே முடிவெடுக்கப்பட்டுவிட்டது.

இப்போது எங்களிடம் எழவேண்டிய கேள்வி என்னவென்றால் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பதா அல்லது தென்னிலங்கை வேட்பாளருக்கு வாக்களிப்பதா என்பதே. பொது வேட்பாளர் வேண்டுமா? இல்லையா? என்ற கேள்வியை எங்கள் அரசியல் எப்போதோ கடந்து வந்துவிட்டது.” – என்றார்.







# தமிழ் மாணவர் எழுச்சி நாள் இன்று...!

மனிதனின் அடிப்படை உரிமைகளில் ஒன்றாக விளங்குவது கல்வி. எந்தக் காலத்திலும் அழியாத செல்வமாகத் திகழ்வதும் கல்வியே. ஒரு சமுதாயத்தின் தூண்களாக எழுபவர்கள் மாணவர்கள்.

காலம் காலமாக, எமது தமிழ் மாணவர்கள் தங்களுடைய இந்த அடிப்படைக் கல்வி உரிமைக்காகப் போராடி வருகின்றனர். காலனித்துவ கால கட்டத்தில் இருந்தே எமது தமிழ் மாணவர்கள், கல்வியில் சிறந்தவர்களாக விளங்கினார்கள். இதனைப் பொறுத்துக் கொள்ளாத சிங்கள ஆட்சிபீடம் 1971 இல் “தரப்படுத்தல்” எனும் இனவெறிச் சட்டம் ஊடாக, பல்கலைக்கழக அனுமதிக்கு, தமிழ் மாணவர்கள் சிங்கள மாணவர்களை விட அதிக புள்ளிகளை பெற வேண்டும் எனும் சட்டத்தை அமுல்படுத்தியது.

இந்த வகையில், உதாரணமாக, மருத்துவத்துறைக்கு அனுமதி பெறத் தமிழ் மாணவர்களுக்கு 250 புள்ளிகள் நிர்ணயிக்கப்பட்டபோது, சிங்கள மாணவர்களுக்கு வெறும் 229 புள்ளிகளே தேவை என நிர்ணயிக்கப்பட்டது. இவ்வாறான இனவெறிச் சட்டங்களால் எமது தமிழ் மாணவர்களுக்கு பொது அலுவலகங்களில் கூட வேலை வாய்ப்புகள் புறக்கணிக்கப்பட்டன.

இந்த அநீதிகளுக்கு எதிராகப் போராடத் துணிந்தவர்தான் பொன்னுத்துரை சிவகுமாரன். இவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் உயர்தர மாணவனாகக் கல்வி பயின்றார். தமிழீழ விடுதலைப் போராட்டம் மற்றும் தமிழ் மாணவர் சமூகத்தின் முன்னோடியாகத் திகழ்ந்தார். தமிழ் மக்களின் ஒடுக்குமுறைக்கு எதிராகவும் தமிழ் மாணவர்களுக்கு மறுக்கப்பட்ட உரிமைகளுக்காகவும் தன்னை மாணவர் பேரவையில் இணைத்துப் போராட ஆரம்பித்தார். இதனால் இவர் மாணவ சமூகத்தினதும் தமிழ் மக்களதும் அன்பையும் ஆதரவையும் பெற்றார். சாதியம், பெண் அடக்குமுறை போன்ற சமத்துவ வாழ்வுக்குப் புறம்பான போக்குகளையும் துணிந்து நின்று எதிர்த்தார்.

தமிழ் மக்களின் விடியலுக்காகத் துணிந்து போராடிய பொன்.சிவகுமாரன் களச் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த தருணத்தில் இலங்கைப் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்ட போது, எதிரிகளிடம் உயிருடன் பிடிபடக்கூடாது என்ற உயர்ந்த இலட்சியத்தைத் தாங்கி சயனைட் அருந்தித் தமிழர் போராட்டத்தின் முதல் தற்கொடையாளனாய் 1974 ஆம் ஆண்டு ஜூன் 5 ஆம் திகதி வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

இவரின் வீரச்சாவு இளைஞர்களிடத்தில் பெரும் எழுச்சியை ஏற்படுத்தியது. மயானத்துக்குப் பெண்கள் முதன் முதலில் வந்த நிகழ்வாகக் கூட அது அமைந்தது. இவரின் வீரச்சாவை அடுத்து ஜூன் 6 ஆம் நாள் சிவகுமாரன் நினைவாகத் தமிழ் மாணவர் எழுச்சி நாள் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இந்த நாளானது, தமிழ் தேசத்திலும் புலம்பெயர் மண்ணிலும் வாழும் தமிழ் மக்களால் உணர்வு பூர்வமாக நினைவுகூரப்பட்டு வருகிறது.




# நுவரெலியாவில் நேற்று 25 ஆயிரம் பேரின் கையொப்பங்களுடன் மகஜர் கையளிப்பு!

(ஆ.ரமேஸ்)

நுவரெலியா மாவட்ட மக்களுக்குக் கிடைக்கும் அரச சேவைகளை இம் மாவட்ட மக்கள் பூரணமாகப் பெற்றுக்கொள்வதை உறுதி செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்து நுவரெலியா மாவட்ட பொதுமக்கள் மற்றும் சிவில் அமைப்பினர் என 25 ஆயிரம் பேரின் கையொப்பங்களுடன் மகஜர் ஒன்று நுவரெலியா மாவட்ட செயலகத்தில் கையளிக்கப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் நுவரெலியா மாவட்ட செயலகத்துக்கு அணியாக வருகை தந்த சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், நுவரெலியா மாவட்ட உதவி மேலதிக செயலாளர் தினிகா கவிசேகரவின் காரியாலயத்துக்குச் சென்று இம்மகஜரைக் கையளித்தனர்.

இதையடுத்து அங்கு ஊடகங்களுக்கு இந்த விடயம் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

இதன்போது நுவரெலியா மாவட்ட சிவில் அமைப்புகளின் ஒருங்கிணைப்பாளர் பி.சக்திவேல் கருத்துரைக்கையில்,

“நுவரெலியா மாவட்டத்தில் காணப்பட்ட நுவரெலியா, கொத்மலை, ஹங்குராங்கெத்த, வலப்பனை மற்றும் அம்பகமுவ ஆகிய பிரதேச செயலகங்களுக்கு மேலதிகமாக தலவாக்கலை, நோர்வூட் மற்றும் வலப்பனையில் மூன்று பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு புதிதாக உருவாக்கப்பட்டுள்ள புதிய பிரதேச செயலகங்களில் அரச சேவைகளைப் பொதுமக்கள் பூரணமாகப் பெற்றுகொள்ள முடியாத வகையில் அங்கு இடம் மற்றும் ஆளணிப் பற்றாக்குறை உட்பட பௌதீக வளங்களின் பற்றாக்குறைகள் நிலவுகின்றன.

ஆகையினால் இங்கு சேவைகளைப் பெற்றுக் கொள்ளச் செல்லும் பிரதேச மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதுடன் ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதிலும் சிரமத்தை அனுபவித்து வருகின்றனர்.

அதேநேரத்தில் நுவரெலியா மாவட்டத்தில் பிரதேச செயலகங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டிருந்தாலும் மேலும் மூன்று பிரதேச செயலகங்கள் அதிகரிக்கப்பட வேண்டும்.

அதேபோல் இம் மாவட்டத்தில் மக்கள் தொகைக்கேற்ப கிராம சேவகர் பிரிவுகள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் முறையாக நியமிக்கப்படவில்லை.

இதனால் பெருந்தோட்டங்களில் வாழும் மக்கள் முறையான அரச சேவைகளை இன்னும் பெற்றுக்கொள்ள முடியாத சமூகமாகவே காணப்படுகின்றனர்.

இந்தநிலையில், தமிழ் மக்கள் பெருவாரியாக வசிக்கக் கூடிய பகுதிகளில் உருவாக்கப்பட்டுள்ள புதிய பிரதேச செயலகங்களில் காணப்படும் குறைபாடுகளை இனங்கண்டு நிவர்த்திக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை நாம் எழுத்து மூலமாகவும் ,25 ஆயிரம் பொதுமக்களின் கையொப்பங்களுடனும் கையளித்துள்ளோம்.” – என்றார்.



# வீழ்ச்சியடைந்து வரும் தரம் 1 மாணவர் சேர்வு

## கல்வி அமைச்சர் தகவல்

பிறப்பு வீதம் வீழ்ச்சியடைந்ததன் காரணமாக தரம் ஒன்றுக்கான மாணவர் சேர்க்கை வீழ்ச்சியடைந்து வருகின்றது என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கல்வித்துறையில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாக எதிர்க்கட்சியால் நாடாளுமன்றத்தில் நேற்று கொண்டுவரப்பட்ட ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சில வருடங்களுக்கு முன்னர் 3 இலட்சத்து 30 ஆயிரமாகக் காணப்பட்ட இலங்கையின் வருடாந்தப் பிறப்பு வீதம், தற்போது 3 இலட்சமாக வீழ்ச்சியடைந்துள்ளது என்றும் அவர் கூறினார்.

இதனால் எதிர்காலத்தில் தரம் 1 இற்கான மாணவர் சேர்க்கை குறைவடையும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

“நாட்டின் கல்வி முறையின் மீது மாணவர்கள் நம்பிக்கை இழந்து வருவதால் பாடசாலைக் கல்வி முறையில் இருந்து



விலகி, மேலதிக வகுப்புக்களை நோக்கி அவர்கள் ஈர்க்கப்படுகின்றனர். எனவே, மாணவர்களிடையே நாட்டின் கல்வி முறையில் நம்பிக்கை கொண்டு வரும் வகையில் திட்டம் வகுக்கப்பட வேண்டும்.” – என்றும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேலும் தெரிவித்தார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

ஆனால் மற்றைய இருவரும் – சஜித் பிரேமதாஸவும் அநுரகுமார திஸநாயக்கவும் – முழுமூச்சில், முழு வீச்சில், களத்தில் இருக்கின்றனர்.

இருவரும் தங்களின் பிரசார நடவடிக்கைகளின் ஒரு கட்டமாக அடுத்து வரும் நாள்களில் வடக்கேயும் விசிட் பண்ணுகிறார்கள்.

சஜித் பிரேமதாஸ நாளை மறுதினம் சனிக்கிழமை இரவு யாழ் வந்து சேருகின்றார். அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை காலையிலிருந்து அவருக்கு வடக்கே நிகழ்ச்சிகள். வியாழக்கிழமை வரை ஐந்து நாள்கள் பல்வேறு தலைவர்களையும் மக்களையும் அவர் சந்திக்கின்றார். கிளிநொச்சி, முல்லைத்தீவு உட்பட பல இடங்களுக்கும் சொல்லுகின்றார். பல கூட்டங்களில் பங்குபற்றுகின்றார்.

இதேசமயம், அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை மீண்டும் தேசிய மக்கள் சக்தியின் – ஜே.வி.பியின் – தலைவர் அநுர குமார திஸநாயக்கவும் வடக்கே வருகின்றார். இந்த முறையும் மூன்று நாள்கள் வரை வடக்கில் அவருக்கும் நிகழ்ச்சி நிரல் என்று தெரிகிறது.

இதேவேளை தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்ற தமிழ் சிவில் சமூகக் குழுவுக்கு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பிரதான பங்காளிகளின் ஆதரவு கிடைத்திருக்கின்றமையினால் அவர்களும் உற்சாகம் பெற்று இருக்கின்றனர். பிரசாரத்தில் அவர்கள் புத்தெழுச்சியுடன் களமிறங்க தயாராகி வருகின்றனர். சிவாஜிலிங்கம் போன்றோர் நாடு திரும்பி இருக்கின்றமை இன்னும் உற்சாகத்தைத் தரக் கூடும்.

தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவதை வரவேற்காத தமிழரசுக் கட்சியின் ஒரு பிரிவைச் சேர்ந்த சுமந்திரன் இது தொடர்பில் மக்கள் கருத்தறியும் ஆய்வுப் பொதுக் கூட்டத்தை வார இறுதியில் யாழ்ப்பாணத்தில் நடத்தக்கூடும்.

ஆக, ஜனாதிபதித் தேர்தலை ஒட்டிய விவகாரம் வடக்கில் இந்த வார இறுதியோடு களை கட்டப் போகின்றது என்பது திண்ணம்.

\+ + +

நேற்று மாலை முரசு வெளியாகி சற்று நேரத்தில் அரசியல் நண்பர் ஒருவர் அழைப்பு எடுத்தார்.

"சிறுவயதில் – முதலாம், இரண்டாம் வகுப்பில் – 'படம் பார்த்து கதை கூறுதல்' என்று ஒரு பாடம் உள்ளது. நினைவிருக்கின்றதா?" – எனக் கேட்டார்.

நான் முந்திக் கொண்டு "ஆம். அந்தக் காலத்திலேயே – மிகச் சிறு வயதிலேயே – படம் பார்த்து நன்றாகப் புளுகுக் கதை சொல்வேனாம் நான். அதனால் நான் வளர்ந்து நல்ல பத்திரிகையாளனாக வருவேன் என்று என்னைவிட சுமார் இருபது வயது மூத்த பிரபல தமிழ், ஆங்கில பத்திரிகையாளரான எனது மைத்துனர் ஒருவர் அப்போதே ஆருடம் கூறினார் என நான் கேள்விப்பட்டிருக்கிறேன். கதை விடுவதுதானே எங்கள் வேலை...!" – என்று சிரித்துக் கொண்டு நான் பதில் கூறினேன்.

"ஆமாம்... இப்போதும் நீங்கள் படம் மூலம் விட்டிருக்கும் கதை பற்றித்தான் நான் பேச வருகிறேன். உங்களின் இன்றைய (நேற்றைய) மாலை முரசு பத்திரிகையின் முதலாம் பக்கத்தில் படம் காட்டி நீங்கள் கதை கூறியிருக்கிறீர்கள். சம்பந்தன் ஐயா ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகளைச் சந்தித்த படம்தான். அது தன்னுடைய வழமையான பாணியில் கையைத் தூக்கி ஆக்ரோஷமாக பேசும் சம்பந்தனின் அந்தப் படம் பலருக்கும் பல செய்திகளைச் சொல்கின்றது. அவர் சொன்னவை என்று குறிப்பிட்டு நீங்கள் பிரசரித்துள்ள செய்திக்கு அந்த ஆக்ரோஷம் வலுச் சேர்த்திருக்கிறது." – என்றார் அவர்.

அண்மைக் காலத்தில் சம்பந்தன் கூறியவை என்று முரசில் வந்த செய்திகளை இட்டுக் கட்டியவை எனக் கூறியவர்களுக்கு இந்த செய்தியும் படமும் சமர்ப்பணம்.

அந்த நண்பருக்கு கடைசியாக ஒன்றை கூறிவைத்தேன்.

"போகின்ற போக்கில் வரும் ஜனாதிபதி தேர்தலை ஒட்டிய விடயங்களுக்கு இந்த தள்ளாத வயதிலும் சம்பந்தன் மேடை ஏறினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை" என்றேன் நான்.

அவர் அதிர்ந்து தொலைபேசியை வைத்து விட்டார்.

## தியாகி சிவகுமாரனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நினைவு கூருகின்றேன்.

அதேவேளை, தமிழனத்தின் தேசிய பூவான கார்த்திகை மலரைப் பாதணியில் பொறித்த டி.எஸ்.ஐ. பாதணி தயாரிப்பு நிறுவனத்திற்கு நாமும் தமிழ் மக்களும் காட்டிய எதிர்ப்பை ஏற்றுக்கொண்ட அவர்கள் அவ்வாறு கார்த்திகைப்பூ பொறிக்கப்பட்ட பாதணிகளை மீளப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதற்காக அந்த நிறுவனத்துக்குத் தமிழ் மக்கள் சார்பாக எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்." – என்றார்.

## மோடிக்குத் தொலை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இதன்போது ஜனாதிபதியும் மோடியின் அழைப்பை ஏற்றுக்கொண்டார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, நேற்றிரவு இந்தியப் பிரதமர் பதவியை இராஜினாமா செய்த நரேந்திர மோடி, மூன்றாவது முறையாக சனிக்கிழமை பதவியேற்கவுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியா முழுவதும் மக்களவைத் தேர்தல் முடிவுகள் நேற்றுமுன்தினம் வெளியாகின. இதில் பா.ஜ.க.வுக்கு தனிப் பெரும்பான்மைக்குத் தேவையான 272 தொகுதிகளுக்கு மாறாக, 240 தொகுதிகளே கிடைத்துள்ளன. எனினும், பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி (என்.டி.ஏ) ஆட்சி அமைக்கும் அளவில் 293 தொகுதிகளைப் பெற்றுள்ளது. அதேநேரம் இந்தியக் கூட்டணி 232 இடங்களை வென்றது.

இந்நிலையில், மத்தியில் ஆட்சி அமைக்க 272 உறுப்பினர்கள் தேவை என்ற நிலையில், சந்திரபாபு நாயுடுவின் தெலுங்கு தேசம், நிதிஷ் குமாரின் ஐக்கிய ஜனதா தளம் ஆகிய கூட்டணி கட்சிகளின் ஆதரவுடன் மத்தியில் 3 ஆவது முறையாக ஆட்சி அமைக்கவுள்ளது பா.ஜக. இதற்காக நேற்று கூட்டணிக் கட்சிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தியது.

இதன் அடுத்தகட்டமாக, தனது பிரதமர் பதவியை இராஜினாமா செய்தார் நரேந்திர மோடி. மேலும், 17ஆவது மக்களவையைக் கலைப்பதற்கான பரிந்துரை கடிதத்தையும் இந்தியக் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவை நேரில் சந்தித்து அவர் கையளித்தார். டில்லியில் ராஷ்டிரபதி பவனில் இந்தச் சந்திப்பு நடந்தது.

17ஆவது மக்களவையைக் கலைக்கும் பரிந்துரைகளையும் ஏற்றுக்கொண்ட குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு, பிரதமர் மோடியின் இராஜினாமாவை ஏற்றுக் கொண்டார். மேலும் புதிய அரசு அமையும் வரை மோடியைக் காபந்து பிரதமராகச் செயற்படுமாறு கேட்டுக்கொண்டார்.

இதற்கிடையே, மூன்றாவது முறையாகப் பிரதமராக மோடி வரும் சனிக்கிழமை பதவியேற்கவுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை தேசிய ஜனநாயகக் கூட்டணி கட்சி எம்.பிக்கள் கூட்டம் நடத்தப்படவுள்ளது. இதில் மக்களவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் படவுள்ளார் மோடி. அதன்பின் அந்தக் கடிதத்தைக் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவிடம் வழங்கிய பின், மறுநாள் சனிக்கிழமை மூன்றாவது முறையாக பிரதமராக மோடி பதவியேற்பார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பிரதமர் மோடியின் பதவியேற்பு நிகழ்வில் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்பார் எனத் தெரிய வருகின்றது. அத்துடன், வெளிவிவகார அமைச்சரும் டில்லி செல்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## தேசிய கல்வி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சபையில் நேற்று நடைபெற்ற கல்வி அமைச்சு தொடர்பான முழுநாள் விவாதப் பிரேரணையின்போது, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவிடம் மேற்கண்ட கேள்வியை எழுப்பிய மனோ கணேசன் எம்.பி. மேலும் கூறியதாவது,

"இந்த வருடம் பெப்ரவரி மாதம், தகைமை அடிப்படையில் நேர்முகப் பரீட்சையில் அதிக புள்ளிகள் பெற்றதால், கலாநிதி. எஸ். கருணாகரன் பணிப்பாளர் பதவியில் நியமிக்கபட இருந்தார். ஆனால், அவருக்கு இந்தப் பதவியைத் தர முட்டுக்கட்டை போடப்பட்டது. நான் அப்போதே இப்பிரச்சினையில் தலையிட்டு அவருக்கு நியாயம் பெற்றுகொடுத்தேன். அப்புறம் என்ன? அதைத் தொடர்ந்து அப்போது இருந்தே இவருக்கு இனவாத அடிப்படையில் தொல்லை, தொந்தரவு கொடுக்கப்படுகின்றது. அப்போதே உங்களிடமும், ஜனாதிபதி செயலகத்திடமும் இதுபற்றி அறிவித்தும் இருந்தேன்.

இங்கே என்ன பிரச்சினை? அவர் ஒரு தமிழர். மலையக தமிழர். இதுவா இவர்களுக்குப் பிரச்சினை?

கலாநிதி. எஸ். கருணாகரன் மீது இனவாதம் காட்டும் நபர்களின் பெயர் விபரங்கள் என்னிடம் இங்கே இருக்கின்றன. எனக்குள்ள பண்பாடு கருதி அவற்றை இங்கே நான் பகிரங்கமாகச் சொல்லவில்லை. அவர் ஜனாதிபதிக்கு இதுபற்றி எழுதியுள்ள புகார் கடித நகலை எனக்கும் அனுப்பியுள்ளார். அதை எனது மேற்கோள் கடிதத்துடன் உங்களுக்கு இதோ தருகின்றேன். அவருக்கு நியாயம் பெற்றுக்கொடுங்கள்.

இந்நாட்டில் நாம் இன்று இனவாதப் பிசாசை கடந்து வந்துள்ளோம். எனவே, இவர்கள் தொடர்பில் நீங்கள் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுங்கள். அவர்களுக்கு இங்கே இவருடன் பணி செய்ய முடியாவிட்டால், அவர்கள் வேறு எங்காவது போகட்டும். ஆனால், கலாநிதி எஸ். கருணாகரன் நிம்மதியாக இங்கே பணி செய்ய இடம் இருக்க வேண்டும்." – என்றார்.

மனோ எம்.பியின் புகார் ஆவணத்தைப் பெற்றுக்கொண்ட கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, இதுபற்றி உடன் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.



# இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்ட பெருந்தொகை விவசாயப் பொருள்கள்

## கடற்படையினரிடம் வசமாகச் சிக்கின

(ந.லோகதயாளன்)

இந்தியாவில் இருந்து கற்பிட்டி ஊடாகக் கடத்தி வரப்பட்ட பெருந்தொகை விவசாயப் பொருள்கள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தியாவில் இருந்து படகு வழியாகக் கற்பிட்டி கடற்கரையில் இறக்கப்பட்டு நாட்டின் பிறபகுதிக்கு எடுத்துச் செல்ல முற்பட்ட சமயமே நேற்று அதிகாலை இவை கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது 31 மூடைகளில் பொதி செய்யப்பட்ட இரசாயன மருந்துகள், கிருமிநாசினிகள், களை நாசினிகளுடன் இலங்கையில் அங்கீகரிக்கப்படாத இரசாயன உர வகைகளும் காணப்படுகின்றன என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர். இவை தொடர்பில் மேலதிக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.















## மீண்டும் விசாரணைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மனுக்கள் நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, விஜித் மலல்கொட, காமினி அமரசேகர, முர்து பெர்னாண்டோ மற்றும் யசந்த கோதாகொட ஆகியோர் அடங்கிய உயர்நீதிமன்ற நீதியர்சர்கள் அடங்கிய அமர்வு முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நிர்ணயித்தவாறு நடத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருந்தன என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் அதன் உறுப்பினர்கள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் இதன்போது தெரிவித்தார்.

எவ்வாறாயினும், தேர்தலை நடத்துவதற்கு நிதி வழங்கப்படாமையால் ஏற்பட்ட நெருக்கடி நிலைகளிலிருந்து தப்பிப்பதற்கு அரசு, தேர்தல்கள் ஆணைக்குழு மீது குற்றம் சுமத்துகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பான அனைத்து தீர்மானங்களும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஒருமித்த கருத்துடன் எடுக்கப்பட்டவை என்று நீதிமன்றில் குறிப்பிடப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஆகியவற்றால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுக்களில் தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் அதன் உறுப்பினர்கள் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

## சாவு எண்ணிக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எண்ணிக்கை 30 ஆக உயர்ந்துள்ளது என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் கலந்து கொண்டு வாய்மூல கேள்விக்குப் பதிலளிக்கும்போதே, அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

இந்தநிலையில், உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இறுதிச்சடங்குகளுக்காக 25 ஆயிரம் ரூபாவை அரசு வழங்கி வருகின்றது என்றும் அவர் கூறினார்.

எவ்வாறாயினும், இறந்தவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்குவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், அனர்த்தங்கள் காரணமாக 71 வீடுகள் முழுமையாகவும், 93 ஆயிரத்து 770 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன என்றும், வீடுகளுக்கு ஏற்பட்ட சேதங்களை மதிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மதிப்பீட்டுப் பணிகள் நிறைவடைந்ததன் பின்னர் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் மேலும் கூறினார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## திருந்துவாரா மோடி?

மூன்றாவது தடவையாகவும் இந்தியாவின் பிரதமராக நாளை மறுதினம் சனிக்கிழமையன்று பதவி ஏற்க இருக்கின்றார் நரேந்திர மோடி.

இந்தியாவின் சரித்திரத்தில் நேருவுக்கு பின்னர் இந்தச் சாதனையைப் படைக்கப் போகின்றவர் நரேந்திர மோடிதான்.

75 வயதாகும் நரேந்திர மோடிக்கு இதற்கு பின்னர் இப்படி ஒரு வாய்ப்புக் கிடைப்பது துர்லபமே. அதுவும் 75 வயதுக்கு மேல் பதவிகள் இல்லை, அரசியலில் ஓய்வு பெற வேண்டியதுதான் என்று குறிப்பிட்டு அத்வானி வரை மூத்த தலைவர்களை வீட்டுக்கு அனுப்பிய பாரதீய ஜனதா கட்சியில் மோடிக்கு இன்னொரு தடவை இத்தகைய வாய்ப்புக் கிட்டுவதற்கு சந்தர்ப்பம் இருக்கவே இருக்காது என்பது நிச்சயம்.

கடந்த தடவை போல மிகப் பலமான நிலையில் இம்முறை அவர் ஆட்சியை அமைக்க முடியாது. கூட்டுக் கட்சிகளின் தயவில்தான் ஆட்சியை அவர் கொண்டிழுக்க வேண்டும்.

இந்தச் சமயத்தில் - இந்தக் கடைசி வாய்ப்பில் - நல்லது செய்ய தமக்குக் கிடைத்த கடைசிச் சந்தர்ப்பத்தை - அவர் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைக்க விரும்புகிறோம்.

'இந்துத்துவா' என்ற பெயரில் அவரது தரப்பு கிளப்பிய உச்ச மதவாதத்தின் பெறுபேறு எதுவரையில் என்பதை இப்பொழுது அவர் உணர்ந்து கொள்ள வாய்ப்புக் கிட்டியிருக்கும் என்று நினைக்கிறோம். இந்தத் தேர்தல் பெறுபேறுகள் அதனை அவருக்கும் அவரது சகாக்களுக்கும் நன்கு உணர்த்தி இருக்கும்.

தேர்தல் முடிந்த பின்னர் வெளியான கருத்துக்கணிப்பு 350 க்கு மேற்பட்ட தொகுதிகளில் அவரின் பாரதீய ஜனதாக் கட்சி தலைமையிலான கூட்டணி வெற்றி பெறும் என தெரிவித்திருந்தது. ஆனால் ஆக 292 இடங்கள் மட்டுமே கிடைத்தன.

எண்பது தொகுதிகள் கொண்ட உத்தரப்பிரதேசத்தை தங்களின் கோட்டை என பாரதீய ஜனதாக் கட்சி கருதி இருந்தது. 2014 மற்றும் 2019 தேர்தல்களில் அத்தகைய வெற்றியை அக்கட்சிக்கு உத்தரப்பிரதேசம் தந்தது. ஆனால் இம்முறை உத்திரப்பிரதேசம் அந்த உத்தரவாதத்தை பாரதீய ஜனதாவுக்கு வழங்காமல் காலை வாரிவிட்டது.

இந்துத்துவா கொள்கையை கையில் எடுத்த பாரதீய ஜனதாவுக்கு ராமர் கோயிலைக் கட்டிய சாதனை பெரும் உதவி புரியும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ராமர் கோயிலை உள்ளடக்கிய பைசாபாத் தொகுதியிலும் படுதோல்விதான்.

இப்படி இந்தியா முழுவதும் பாரதீய ஜனதாவுக்கு கிடைத்த பரவலான தோல்வி சொல்லும் செய்தி என்ன?

பெரும்பான்மையினரின் பக்கம் நிற்பதல்ல, பாதிக்கப்பட்ட - நீதி மறுக்கப்பட்ட - சிறுபான்மையினரின் பக்கம் நிற்பதுதான் நியாயமானது என்ற அறிவுரையைத்தான் இந்தத் தேர்தல் முடிவுகள் மூலம் இந்திய மக்கள் பாரதீய ஜனதாவுக்குக் கூற விழைந்திருக்கின்றனர் என்பதே கருத்தாகும்.

வாக்குகளை சுருட்டுவதற்காக பெரும்பான்மையினரின் பக்கம் 'இந்துத்துவா' என்ற பெயரில் அணி சேர்வதை விடுத்து, பாதிக்கப்பட்ட மக்கள் பக்கம் தனது பார்வையை இந்துத்துவாவாதிகள் திருப்பி இருப்பார்கள் எனில், 'இண்டியா' கூட்டணியால் தேறியேயிருக்க முடியாது.

அயல் தேசமான இலங்கை விடயத்தில் கூட மோடியும் அவரது அரசும் பாதிக்கப்பட்ட - நலிவுற்ற - நீதியை எதிர்பார்த்திருக்கின்ற - தமிழர் தரப்பு பக்கம் நிற்கவில்லை. தமிழர் நலன் குறித்து இந்தியாவும் இந்திய அரசியல்வாதிகளும் கடந்த 25 ஆண்டுகளாக வாய்ச் சொற்களில் நடிப்பு அரசியலைக் காட்டினார்களே தவிர, அவர்களுக்காக உருப்படியான நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை. மாறாக, இலங்கைத்தீவின் பெரும்பான்மையினர் பக்கத்தில் - அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சிங்கள அரசின் பக்கத்தில் - இலங்கையில் சிறுபான்மையினரை அடக்கி ஒடுக்கின்ற பெரும்பான்மையினர் தரப்போடு - மோடி அரசு நிலையெடுத்திருந்தது. நிலையெடுத்திருக்கின்றது.

யுத்தம் முடிவடைந்து 15 வருடங்களாகியும் ஈழத் தமிழருக்கு நீதி செய்யப்படவில்லை. நியாயம் வழங்கப்படவில்லை. அவர்களையும் அவரது பிரதிநிதிகளையும் ஏறெடுத்துக் கூடப் பார்க்க முடியாத 'திமிர் நிலை' அரசியலைத் தான் மோடி முன்னெடுத்தார்.

அதே திமிர்த்தன அரசியலுக்கு இந்திய மக்கள் குட்டுப் போட்டு நல்ல தொரு பாடத்தை அவருக்கு இந்தத் தேர்தல் மூலம் போதித்துள்ளார்கள். அந்தப் பாடத்துடன் அவர் திருந்துவாரெனில் - தன்னைத் திருத்திக் கொள்வாரெனில் - இலங்கையிலும் நலிவுற்ற தமிழர் மக்கள் மீது அவரது ஆதரவு பார்வை திரும்பும். திரும்ப வேண்டும். இந்தக் கடைசி வாய்ப்பில் அவர் திருந்தினால் அது சாத்தியமாகும்.

# மக்களினது தேர்தல் தீர்ப்பு மோடிக்கும் அவரது அரசியல் முறைக்கும் எதிரானது

## மல்லிகார்ஜுன கார்கே தெரிவிப்பு



"இது ஒரு தெளிவான தார்மிக தோல்வி என்பதைத் தாண்டி தனிப்பட்ட முறையில் மோடிக்கு இது ஒரு பெரிய அரசியல் தோல்வி. எனினும், அவர் மக்களின் விருப்பத்தை தகர்ப்பதில் பிடிவாதமாக இருக்கிறார்."

– இவ்வாறு டில்லியில் நடைபெற்ற இண்டியா கூட்டணியின் ஆலோசனைக் கூட்டத்துக்குப் பின்னர் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்தார்.

நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் இண்டியா கூட்டணி 232 இடங்கள் வெற்றி பெற்ற நிலையில்,நேற்று மாலை டில்லியில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே இல்லத்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி, தமிழக முதல்வர் ஸ்டாலின் உள்ளிட்ட கூட்டணி தலைவர்கள் பங்கேற்றனர்.

இந்த கூட்டத்தில் தேர்தல் முடிவுகள் குறித்தும், அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும் விவாதிக்கப்பட்டதாக தெரிகிறது. இந்த கூட்டத்துக்குப் பிறகு பேசிய மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை தேர்தலில் இண்டியா கூட்டணியில் இடம் பெற்றுள்ள அனைத்து கட்சியின் தலைவர்களும் சிறந்த முறையில், ஒற்றுமையுடன் செயல்பட்டனர் என தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மக்களின் தீர்ப்பு மோடிக்கு எதிராகவும் அவரது அரசியல் முறைக்கு எதிராகவும் அமைந்திருக்கிறது. இது ஒரு தெளிவானதார்மிகதோல்விஎன்பதைத்தாண்டிதனிப்பட்டமுறையில் மோடிக்கு இது ஒரு பெரிய அரசியல் தோல்வி. எனினும், அவர் மக்களின் விருப்பத்தை தகர்ப்பதில் உறுதியாக இருக்கிறார்.

நமது அரசியல் சாசனத்தில் பொறிக்கப்பட்டுள்ள மாண்புகளையும் அதன் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நீதிக்கான அடிப்படை உறுதிப்பாட்டைபகிர்ந்துகொள்ளும்அனைத்து கட்சிகளையும் இண்டியா கூட்டணி வரவேற்கிறது.

எங்கள் கூட்டணிக்கு அமோக ஆதரவை தந்த இந்திய மக்களுக்கு இண்டியா கூட்டணி தலைவர்கள் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறார்கள். பா.ஜ.கவுக்கும் அவர்களின் வெறுப்பு மற்றும் ஊழல் அரசியலுக்கு மக்களின் தீர்ப்பு தகுந்த பதிலடியை கொடுத்துள்ளது.

இது இந்திய அரசயமைப்புச் சட்டத்தைப் பாதுகாப்பதற்கும் விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம் மற்றும் க்ரோனி கேபிடலிசத்துக்கு எதிராகவும், ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்குமான தீர்ப்பாகும். மோடி தலைமையிலான பா.ஜ.கவின் பாசிச ஆட்சிக்கு எதிராக இண்டியா கூட்டணி தொடர்ந்து போராடும்."– என்றார்.

# மக்களவைத் தேர்தலில் போட்டியிட்ட 5 தொகுதிகளிலும் தே.மு.தி.க. தோல்வி



மக்களவைத் தேர்தலில் போட்டியிட்ட 5 தொகுதிகளிலும் தே.மு.தி.க. தோல்வி அடைந்துள்ளது. பிரேமலதா தலைமையிலான தே.மு.தி.க. மீண்டு வருமா என கேள்விகள் எழுந்துள்ளது.

தமிழகத்தில் மக்களவைத் தேர்தல் கடந்த ஏப்ரல் 19 ஆம் திகதி நடைபெற்றது. இந்த முறை தி.மு.க, அ.தி.மு.க, பா.ஜ.க ஆகிய கட்சிகள் தங்கள் தலைமையில் கூட்டணி அமைத்தும், நாம் தமிழர் கட்சி தனித்தும் போட்டியிட்டன. நான்கு முனை போட்டியில் தி.மு.க. கூட்டணியானது மொத்தம் உள்ள 39 தொகுதிகளில் அமோக வெற்றி பெற்றது.

இத்தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணியில் இடம் பெற்றிருந்த தே.மு.தி.க. விருதுநகர், கடலூர், தஞ்சாவூர், திருவள்ளூர் (தனி), வடசென்னை ஆகிய 5 தொகுதிகளில் போட்டியிட்டு அனைத்திலும் தோல்வியை தழுவியது.

குறிப்பாக திருவள்ளூர், வடசென்னை ஆகிய தொகுதிகளில் தே.மு.தி.க. வேட்பாளர்கள் கட்டுப்பணத்தை இழந்தனர். இதில் வட சென்னை தொகுதியில் தே.மு.தி.க .வேட்பாளர் பார்த்தசாரதி 72,016 வாக்குகள் பெற்று 3 ஆம் இடத்தை பிடித்தார். விருதுநகரில் மட்டும் தே.மு.தி.க. சார்பில் போட்டியிட்ட விஜயபிரபாகரன் (விஜயகாந்த் மகன்) காங்கிரஸ் வேட்பாளர் மாணிக்கம் தாகூருக்கு இறுதி வரை கடுமையான போட்டியாக விளங்கினார்.

குறைந்தளவில் 4,379 வாக்குகள் வித்தியாசத்தில் தான் தோல்வி அடைந்தார். ஒட்டுமொத்தமாக விஜய பிரபாகரன் 3 லட்சத்து 80 ஆயிரத்து 877 வாக்குகள் பெற்று அனைவரின கவனத்தை பெற்றார்.

அதேநேரம் தொடர்ந்து சரிவில் பயணித்த தே.மு.தி.க. வாக்கு விகிதம் சற்று உயர்ந்துள்ளது. தற்போதைய தேர்தலில் தே.மு.தி.க. தான் போட்டியிட்ட 5 தொகுதிகளிலும் சேர்த்து 11 லட்சத்து 28 ஆயிரத்து 616 (2.59 வீதம்) வாக்குகளைப் பெற்றுள்ளது. இது சமீபத்திய தேர்தல்களைவிட அதிகமாகும்.

முதன்முதலாக 2005 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் 234 இடங்களில் போட்டியிட்ட தே.மு.தி.க. 27.64 லட்சம் வாக்குகளை பெற்றது. கட்சி ஆரம்பித்தவுடன் நடைபெற்ற தேர்தலில் தேமுதிகவுக்கு சுமார் 8.4 சதவீத வாக்குகள் கிடைத்தது அனைவருருக்கும் ஆச்சரியத்தை அளித்தது. மேலும், விருத்தாசலத்தில் போட்டியிட்ட அந்த கட்சியின் தலைவரான மறைந்த விஜயகாந்த் வெற்றி பெற்றார்.

அதற்கடுத்த 2009 மக்களவைத் தேர்தலிலும் தனித்து போட்டியிட்ட தே.மு.தி.க. 31.26 லட்சம் வாக்குகளை பெற்றது. இது பதிவான மொத்த வாக்குகளில் 10.3 சதவீதமாகும். 2011 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.கவுடன் இணைந்து தே.மு.தி.க. போட்டியிட்டது. தே.மு.தி.கவுக்கு 7.9 சதவீத வாக்குகளுடன் 29 இடங்களை கைப்பற்றி எதிர்க்கட்சியாகவும் அங்கீகாரம் பெற்றது.

ஆனால், அங்கிருந்துதான் தே.மு.தி.கவின் வீழ்ச்சி ஆரம்பித்தது. அ.தி.மு.க, தி.மு.க. ஆகிய கட்சிகளுக்கு மாற்றாக கருதப்பட்ட தே.மு.தி.க, அ.தி.மு.க. கூட்டணியில் சென்றதை நடுநிலை வாக்காளர்கள் விரும்பவில்லை. கட்சிக்குள் குடும்பத்தின் ஆதிக்கம் வந்ததை தொடர்ந்து பண்ருடி ராமசந்திரன் உட்பட முக்கிய நிர்வாகிகள் தே.மு.தி.கவில் இருந்து வெளியேறினர்.

அதன்பின் விஜயகாந்த் உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட கட்சியின் வளர்ச்சி தடைப்பட்டது. 2014 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலின்போது பா.ஜ.க. கூட்டணியில் 14 இடங்களில் போட்டியிட்ட தே.மு.தி.க. அனைத்திலும் தோல்வி அடைந்தது. வாக்கு விகிதம் 5.1 சதவீதமாக குறைந்தது. அதற்கு பிறகும் சரிவு தொடர்ந்தது. 2016 சட்டமன்றத் தேர்தலில் மக்கள் நலக் கூட்டணி என்ற பெயரில் ம.தி.மு.க, இடதுசாரிக் கட்சிகள், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியுடன் இணைந்து 104 இடங்களில் போட்டியிட்ட தே.மு.தி.க. ஒரு இடத்தில்கூட வெற்றி பெறவில்லை. அக்கட்சி பெற்ற வாக்குகளின் சதவீதம் 2.41 சதவீதமாக குறைந்தது. உளுந்தூர்பேட்டை தொகுதியில் போட்டியிட்ட விஜயகாந்த் சுமார் 34,000 வாக்குகளுடன் 3 ஆவது இடத்தையே பிடித்தார்.

இதற்கு பிந்தைய 2019 மக்களவைத் தேர்தலில் 2.16 சதவீதமும், 2021 சட்டமன்றத் தேர்தலில் 0.43 சதவீதமாகவும் தே.மு.தி.கவின் வாக்கு வங்கி வெகுவாக குறைந்தது. இந்தசூழலில் தே.மு.தி.க. தலைவரான விஜயகாந்த் உடல் நலக் குறைவால் கடந்த டிசம்பர் 28 ஆம் திகதி மரணம் அடைந்தார். அதற்கு சில வாரங்கள் முன்னரே அவரின் மனைவி பிரேமலதா கட்சியின் பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டார்.

தொடர் தோல்விகள், பொருளதார நெருக்கடி உள்ளிட்ட பல்வேறு சிக்கல்களுக்கு மத்தியில் கட்சியை வளர்ச்சி பாதையில் கொண்டுச் செல்ல வேண்டிய நிர்பந்தம் பிரேமலதாவுக்கு இருந்தது. அதற்கேற்ப தற்போதைய மக்களவைத் தேர்தலை அ.தி.மு.க. கூட்டணியில் சேர்ந்து எதிர்கொள்ள தே.மு.தி.க. முடிவு செய்தது. அது தே.மு.தி.கவுக்கு சாதகமாக அமைந்துள்ளது. அ.தி.மு.க. கூட்டணியில் 5 தொகுதிகளில் போட்டியிட்டு 2.59 வீத வாக்குகளை பெற்று மீண்டும் அரசியல் களத்தில் தன் இருப்பை தக்க வைத்துள்ளது.

# மாலைதீவுகளுக்குள் நுழையத் தடை;

# இந்தியாவிற்கு சுற்றுலா செல்லுமாறு இஸ்ரேலியர்களுக்கு அறிவுறுத்தல்



இஸ்ரேலியர்கள் தமது நாட்டிற்குள் நுழைவதற்கு தடை விதிப்பதாக கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலைதீவுகள் அரசாங்கம் அறிவித்தது.

இதனையடுத்து, இந்திய கடற்கரைகளுக்கு சுற்றுலா செல்லுமாறு இஸ்ரேலியர்களை இந்தியாவில் உள்ள இஸ்ரேல் தூதரகம் கேட்டுக்கொண்டுள்ளது.

"இஸ்ரேலியர்களை வரவேற்கவில்லை என்று மாலைதீவு அறிவித்துள்ளதால், அழகான சில இந்திய கடற்கரைகளை நாங்கள் பரிந்துரைக்கிறோம். இங்கே இஸ்ரேலியர்கள் அன்புடன் வரவேற்கப்படுவார்கள். அதோடு, மிகுந்த விருந்தோம்பலையும் நீங்கள் பெறுவீர்கள்," என தூதரகத்தின் எக்ஸ் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

லட்சத்தீவு, கோவா, அந்தமான் நிகோபர் தீவுகள், கேரளா ஆகியவற்றின் கடற்கரை புகைப்படங்களையும் இணைத்து இந்த கோரிக்கையை இஸ்ரேலிய தூதரகம் விடுத்துள்ளது.

அமைச்சரவையின் பரிந்துரையை அடுத்து, மாலைத் தீவுகள் ஜனாதிபதி முகமது மொய்சு இஸ்ரேலிய கடவுச்சீட்டுகளுக்கு தடை விதிக்க முடிவு செய்துள்ளார்.

மேலும், பாலஸ்தீனியர்களின் தேவைகளை மதிப்பிடுவதற்கு சிறப்பு தூதுவரை நியமிக்கவும் ஜனாதிபதி முகமது மொய்சு தீர்மானித்துள்ளார்.

# பிரேசிலில் விமான விபத்து; இரண்டு பேர் உயிரிழந்தனர்



பிரேஸில் நாட்டின் சான்டா கேட்டரினா மாநிலத்தில் சிறிய ரக விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

தனியார் கட்டுமான நிறுவனத்திற்கு சொந்தமான அந்த விமானம், மினாஸ் ஜெராயிஸ் மாநிலம் கவர்னடார் வாலடேர்ஸ் நகரில் இருந்து சான்டா கேட்டரினா தலைநகர் புளோரியானோபொலிஸ் நகர் நோக்கி சென்றது.

இடாபோவா நகரின் அருகில் சென்றபோது, விமானத்தை அவசரமாக தரையிறக்க ஜாயின்வில்லி விமான நிலையத்துடன் விமானி தொடர்பு கொண்டுள்ளார் என கூறப்படுகின்றது.

இந்த நிலையில், விமானத்தை அவசரமாக தரையிறக்க முயற்சித்தபோது, விமான நிலையத்தை தாண்டி மரங்கள் அடர்ந்த பகுதியில் விழுந்து நொருங்கியதில் 2 பேர் உயிரிழந்தனர்.

தகவல் அறிந்த தீயணைப்பு மற்றும் மீட்புக் குழுவினர் விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். விமானத்தில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டதா அல்லது வேறு ஏதேனும் காரணமா என்பது குறித்து விசாரணை நடத்தப்படுகிறது.

ஜாயின்வில்லி விமான நிலையத்துடன் விமானி தொடர்பு கொண்டு அவசரமாக தரையிறங்க முயற்சித்தது ஏன் என்பது குறித்து விமானப்படை விசாரித்து வருகிறது.



# தயாசிறி ஜயசேகர தொடர்பில் தீர்மானிப்பதற்கு மைத்திரிபால சிறிசேனவிற்குக் கால அவகாசம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக கடமையாற்றிய தயாசிறி ஜயசேகரவின் கட்சி உறுப்புரிமையை இரத்து செய்து வெளியிடப்பட்ட கடிதம் மீளப்பெறப்படுமா, இல்லையா என்ற தீர்மானத்தை அறிவிப்பதற்கு பிரதிவாதியான மைத்திரிபால சிறிசேன உள்ளிட்டோருக்கு உயர் நீதிமன்றம் நேற்றுக் கால அவகாசம் வழங்கியது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பதவியிலிருந்து தம்மை நீக்கியமைக்கு எதிராக தயாசிறி ஜயசேகரவினால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனு நேற்று உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

இந்த மனு உயர் நீதிமன்ற நீதியரசர்களான ஏ.எச்.எம்.டி. நவாஸ், ஜனக் டி சில்வா, பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுதாரருக்கு எதிரான கடிதத்தை மீளப்பெறுவதா, இல்லையா என்ற தீர்மானத்தை அறிவிப்பதற்கு தமது சேவை பெறுநருக்கு கால அவசகாசம் தேவைப்படுவதாக மனுவின் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தவிசாளர் மைத்திரிபால சிறிசேன, பதில் பொதுச் செயலாளர் சரத் ஏக்கநாயக்க ஆகியோர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி தெரிவித்தார்.

இதற்கிணங்க, இரண்டு வார கால அவகாசம் அளித்து, அடுத்த அமர்வில் தமது தீர்மானத்தை தெரிவிக்குமாறு, மனுதாரர்களுக்கு நீதியரசர்கள் உத்தரவிட்டனர்.

தம்மை கட்சி உறுப்புரிமையிலிருந்தும் பொதுச்செயலாளர் பதவியிலிருந்தும் நீக்குவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எடுத்த தீர்மானத்திற்கு எதிராக தயாசிறி ஜயசேகர கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

எனினும், தயாசிறி ஜயசேகரவை நீக்கும் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதைத் தடுக்கும் தடை உத்தரவை பிறப்பிக்க கொழும்பு மாவட்ட நீதிமன்றம் மறுத்துவிட்டது.

அந்த தீர்மானத்தை எதிர்த்து மேல் மாகாண சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றில் தயாசிறி ஜயசேகர மீண்டும் மனுவொன்றை தாக்கல் செய்த போதிலும், அதற்கான தடை உத்தரவை பிறப்பிக்க அந்த நீதிமன்றமும் மறுத்துவிட்டது.

அதனையடுத்து, குறித்த நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து தயாசிறி ஜயசேகர உயர்நீதிமன்றில் இந்த மேன்முறையீட்டு மனுவைச் சமர்ப்பித்துள்ளார்.

இந்த மனு ஜூன் 26 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.



# காலி, மாத்தறை மாவட்ட பாடசாலைகள் திறப்பு

காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் உள்ள பாடசாலைகள் இன்று திறக்கப்படுகின்றன என தென் மாகாண வலயக்கல்வி பணிமனை தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், தற்காலிக முகாம்களாக செயற்படும் பாடசாலைகள் இன்று திறக்கப்பட மாட்டா.

இதேவேளை, இரத்தினபுரி கல்வி வலயத்திற்குட்பட்ட இரத்தினபுரி, குருவிட்ட மற்றும் எஹலியகொட வலயங்களுக்குட்பட்ட அனைத்து பாடசாலைகளுக்கும் இன்று விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

நிவித்திகல வலயத்திற்குட்பட்ட எலபாத்த மற்றும் அயகம பிரிவுக்குட்பட்ட அனைத்து பாடசாலைகளும் இன்று மூடப்படவுள்ளன.

இதனிடையே, அனைத்து பாடசாலைகளும் இன்று மீண்டும் ஆரம்பமாகவுள்ளன என சப்ரகமுவ மாகாண கல்வி செயலாளர் தெரிவித்துள்ளார்.

நிலவும் மழையுடனான வானிலையால் காலி, மாத்தறை மற்றும் இரத்தினபுரி உள்ளிட்ட சில மாவட்டங்களிலுள்ள பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டிருந்தன.



# சிறுவனைக் கொடூரமாகத் தாக்கியவர் உட்பட ஐந்து சந்தேக நபர்களுக்கும் விளக்கமறியல்!

மணலாறு பகுதியில் சிறுவன் ஒருவன் மீது கொடூரமாகத் தாக்குதல் நடத்தும் காணொலியுடன் தொடர்புடைய 05 சந்தேகநபர்களையும் விளக்க மறியலில் வைக்க நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

இதன்படி கைது செய்யப்பட்ட 5 பேரும் எதிர்வரும் ஜூன் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளனர்.

சமூக வலைத்தளங்களில் பரவலாக பகிரப்பட்டு வரும் சிறுவனொருவன் தாக்கப்படும் காணொலியுடன் தொடர் புடைய சந்தேகநபர்கள் மூவர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டனர்.

வெலிஓயா பொலிஸார், முல் லைத்தீவு குற்றப்புலனாய்வு பிரிவு மற்றும் புல்மோட்டை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் ஆகியோர் இணைந்து முன்னெடுத்த விசாரணை நடவடிக்கையில் இவர்கள் கைது செய் யப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் 37, 46 வய தான இரண்டு பெண்கள் மற்றும் 45 வயதான ஆணொருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

தாக்குதலுக்குள்ளான நான்கரை வயதான சிறுவன் தற்போது பொலி ஸாரின் பொறுப்பில் உள்ளான் ந்த் தெரிவிக்கப்படுகின்றது.






# நீர் விநியோகப் பிரச்சினைகளை 1939 எனும் துரித அழைப்பு இலக்கத்திற்கு அறிவிக்கலாம்

சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தொடர்ந்தும் நீர் விநியோகம் தடைப்பட்டுள்ளதாக நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

நீர் விநியோகத்தில் பிரச்சினைகள் இருக்குமாயின், 1939 எனும் துரித அழைப்பு இலக்கத்திற்கு அறிவிக்குமாறு சபையின் பிரதி பொது முகாமையாளர் அனோஜா களுஆரச்சி தெரிவித் துள்ளார்.

இதனிடையே, பலட்டுபான நீர் சுத் திகரிப்பு நிலையத்தின் நீர் விநியோகக் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள சேதம் காரணமாக, மஹரகம, ஹோமாகம, கலகெதர, பாதுக்க, மாகும்புர, பெலவத்த உள்ளிட்ட பகுதிகளில் தொடர்ந்தும் குறைந்த அழுத்தத்திலேயே நீர் விநியோகிக்கப்படுவதாக அவர் தெரி வித்துள்ளார்.

நீர் மூலங்கள் வெள்ளத்தில் மூழ்கி யுள்ளமையால், சுத்திகரிப்பு நிலை யங்களுக்கான நீர் வரத்து குறைந்துள் ளதாக குறிப்பிட்ட அனோஜா களு ஆரச்சி, அதன் காரணமாகவே நீர் விநியோகத்தில் தடங்கல் ஏற்பட்டுள்ள தாகவும் சுட்டிக்காட்டினார்.



# இலங்கையில் எரிபொருள் விற்பனையில் ஆஸ்திரேலிய நிறுவனமும் ஈடுபடவுள்ளது

ஆஸ்திரேலிய கனியவள நிறுவனம் ஒன்று இலங்கையில் எரிபொருள் விற்பனையில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


மேற்படி நிறுவனம் எதிர்வரும் ஜுலை அல்லது ஒகஸ்ட் மாதமளவில் இலங்கையில் எரிபொருள் வர்த்தகத்தை ஆரம்பிக்கும்எனஅறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த நிறுவனத்தின் இலங்கைக் கிளையின் பணிப்பாளர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி நிறுவனத்திற்கு இலங்கையில் உள்ள 150 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் வழங்கப்பட்டுள்ளமையுடன் மேலதிகமாக 50 புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்கள் அமைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான ஒப்பந்தம் ஒன்று முதலீட்டுச் சபையுடன் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக 12 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீடு செய்யப்படவுள்ளதுடன் இந்த ஆண்டு இறுதிக்குள் 300 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீடு செய்யப்படும் என அந்த ஆஸ்திரேலிய நிறுனத்தின் இலங்கைக் கிளைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.




# உயர்தர மாணவர்களுக்கான வகுப்புகள் இன்று ஆரம்பம்

இந்த வருடம் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான உயர்தர பாடசாலை வகுப்புகள் இன்று முதல் ஆரம்பமாகவுள்ளன எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. இதற்கான உத்தியோகபூர்வ நிகழ்வு கொழும்பு நாலந்தா கல்லூரியில் இன்றைய தினம் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை நிறைவடைந்து பெறுபேறுகளுக்காக காத்திருக்கும் மூன்று மாத காலத்தை கருத்திற் கொண்டு உயர்தர வகுப்புகளை விரைவாக ஆரம்பிப்பதற்கு கல்வி அமைச்சுத் தீர்மானித்துள்ளது.



# கொத்து ரொட்டி, உணவுப் பொதி விலைகள் குறைக்கப்படுகின்றன

கொத்து ரொட்டி மற்றும் உணவுப் பொதிகள் உள்ளிட்ட சில உணவகங்கள் சார்ந்த பொருள்களின் விலைகள் குறைக்கப்படுகின்றன என உணவக உரிமையாளர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.நேற்று இரவுமுதல் இந்த விலைக் குறைப்பு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இதன்படி கொத்து ரொட்டி மற்றும் உணவுப் பொதிகளின் விலை 25 ரூபாவினாலும், முட்டை ரொட்டி 10 ரூபாவினாலும், லட்டு 5 ரூபாவினாலும் குறைக்கப்பட்டுள்ளன.




# அத்தியாவசிய சேவைகளை அறிவித்து அதிவிசேட வர்த்தமானி வெளியானது

சில துறைகளை தொடர்ந்தும் அத்தியாவசிய சேவையாக அறிவித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

1979 ஆம் ஆண்டின் 61ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச் சேவை சட்டத்தின் 2ஆம் பிரிவிற்கு அமைய இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியுள்ளது.

இதற்கமைய மின்சார விநியோகம், கனியவள உற்பத்தி மற்றும் பகிர்ந்தளித்தல் என்பன தொடர்ந்தும் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. அத்துடன், வைத்திய சாலைகள், மருந்தகங்கள் உள்ளிட்டவையும் அத் தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

# சிவில் கூட்டிணைவு இனிமேல் 'தமிழ் மக்கள் பொதுச்சபை'

தமிழ்ப் பொது வேட்பாளரைக் களமிறக்குவது தொடர்பாக இதுவரை 'வடக்கு – கிழக்கு சிவில் அமைப்புக்களின் கூட்டிணைவு 'என்று அழைக்கப்பட்ட தமிழ் குடிமக்கள் சமூகத்தின் கட்டமைப்பை இனிமேல், 'தமிழ் மக்கள் பொதுச்சபை' என அழைப்பது என்று நேற்று நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் தமிழ் மக்கள் பொதுச் சபையின் பெயரில் நேற்று விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

குடிமக்கள் சமூகக் கூட்டிணைவின் 30.04.2024 வவுனியாத் தீர்மானத்தின் தொடர்ச்சியாக இரண்டாவது பொதுச்சபைக் கூட்டம் 05.06.2024 புதன்கிழமை அன்று யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் விடுதியில் நடைபெற்றது.

அதில் –

ஜனாதிபதித் தேர்தலுக்கான தமிழ்ப் பொதுவேட்பாளர் விடயத்தில் அரசியல் கட்சிகள் தங்கள் முடிவுகளை உத்தியோகபூர்வமாக அறிவித்து முடித்தவுடன் பரஸ்பர புரிந்துணர்வு அடிப்படையில் ஒரு பொதுக்கட்டமைப்பை உருவாக்கி செயற்படுவது என ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டது.

அத்துடன் தமிழ் மக்கள் பொதுச் சபைக்கான ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட வழிகாட்டல் குழுவும் இருபத்தி ஐந்து பேரை உள்ளடக்கிய தலைமை ஒருங்கிணைப்புக் குழுவும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. தலைமை ஒருங்கிணைப்புக் குழுவில் இருந்து தமிழ் மக்கள் சபைக்குரிய செயற்குழுக்கள் தெரிவுசெய்யப்படும் என ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

தொடர்ச்சியாக ஒவ்வொரு மாதத்தின் இறுதி சனிக்கிழமைகளில் ஒவ்வொரு மாவட்டத்திலும் தமிழ் மக்கள் பொதுச் சபை கூடி தேவையான முடிவுகளை எடுக்கும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

– என்று அதில் உள்ளது.

இந்தக் கூட்டத்தில் பல்வேறு அமைப்புகளையும் பிரதிநிதித்துவப்படுத்தி 83 பேர் பங்குபற்றினர் எனத் தெரிவிக்கப்பட்டது.



# அதிவேக நெடுஞ்சாலையின் கடுவலை வெளியேறும், நுழையும் பகுதி திறப்பு

வெள்ளம் காரணமாக முழுமையாக மூடப்பட்ட அதிவேக நெடுஞ்சாலையின் கடுவலை வெளியேறும் மற்றும் உள்நுழையும் பகுதி நேற்று முதல் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய அந்த வீதியூடாக வழமை போன்று பயணிக்க முடியும் என வீதி அபிவிருத்தி அதிகாரசபை அறிவித்துள்ளது.

கடுவலை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக அந்த வீதியூடான போக்குவரத்து பாதிப்படைந்திருந்தது.

எனினும் வெள்ள நீர் குறைவடைந்தமையை அடுத்து மீண்டும் அந்த வீதியைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.





# இலங்கைக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இராஜதந்திரிகள் ஜனாதிபதியிடம் நற்சான்றுப் பத்திரங்களைக் கையளித்தனர்

இலங்கைக்கான புதிதாக நியமிக்கப்பட்ட 05 உயர்ஸ்தானிகர்கள் மற்றும் 09 தூதுவர்கள் நேற்று முற்பகல் கொழும்பு கோட்டை ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தமது நற்சான்றுப் பத்திரங்களைக் கையளித்தனர்.

நியூசிலாந்து, சைப்ரஸ் குடியரசு, மாலைதீவுகள், சியரா லியோன் குடியரசு மற்றும் மொரீஷியஸ் குடியரசு என்பவற்றுக்கான உயர்ஸ்தானிகர்களும் குவாத்தமாலா குடியரசு, அல்ஜீரியா மக்கள் ஜனநாயகக் குடியரசு, எஸ்டோனியா குடியரசு, லாவோஸ் மக்கள் ஜனநாயக குடியரசு, கொலம்பியா குடியரசு, துருக்கி குடியரசு, அயர்லாந்து, ஹெலனிக் குடியரசு (கிரீஸ்) மற்றும் பல்கேரியா குடியரசு ஆகிய நாடுகளின் புதிய தூதுவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த புதிய உயர்ஸ்தானிகர்கள் மற்றும் தூதுவர்களை வரவேற்பதற்காக கோட்டை ஜனாதிபதி மாளிகையில் ஒரு சிறிய விழாவொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நேற்று நற்சான்றுப் பத்திரங்கள் வழங்கப்பட்ட புதிய உயர்ஸ்தானிகர்கள் மற்றும் தூதுவர்களின் விபரம் பின் வருமாறு:

01. ஓமார் கெஸ்டனெடா சோலாரேஸ் – குவாத்தமாலா குடியரசு தூதுவர்

02. அலி அச்செய் – அல்ஜீரியா மக்கள் குடியரசு தூதுவர்

03. மர்ஜே லூப் – எசுத்தோனியா குடியரசு தூதுவர்

04. பௌன்மி வன்மணி – லாவோஸ் மக்கள் குடியரசின் தூதுவர்

05. விக்டர் ஹ்யூகோ ஜரமிலோ – கொலம்பியா குடியரசு தூதுவர்

தொடர்ச்சி▼






















# இலங்கைக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இராஜதந்திரிகள் ஜனாதிபதியிடம் நற்சான்றுப் பத்திரங்களைக் கையளித்தனர்

தொடர்ச்சி▲

06. டேவிட் கிரிகரி பைன் – நியூசிலாந்து உயர்ஸ்தானிகர்

07.செமிஹ் லுட்பு தரகத் – துருக்கி குடியரசு தூதுவர்

08. எவகோரஸ் வர்யோனைட்ஸ் – சைப்ரஸ் குடியரசு உயர்ஸ்தானிகர்

09. கெவின் கெலி – அயர்லாந்து தூதுவர்

10. மசூத் இமாத் – மாலைதீவு குடியரசு உயர்ஸ்தானிகர்

11. அலிகி கௌட்சோமிடோபௌலோ – ஹெலனிக் குடியரசு (கிரீஸ்) தூதுவர்

12. அபூ பக்கர் கரீம் – சியேரா லியோனி குடியரசு உயர்ஸ்தானிகர்

13. நிகோலாய் யான்கோவ் – பல்கேரியா குடியரசு – தூதுவர்

14. ஹெய்மண்டோயல் தில்லும் – மொரிசியசு குடியரசு உயர்ஸ்தானிகர்

இந்த நிகழ்வில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

நற்சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்ட பின்னர் புதிய உயர்ஸ்தானிகர்கள் மற்றும் தூதுவர்களுடன் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.














# 2040 ஆம் ஆண்டில் பசுமை இலக்குகளை அடைந்துகொள்ள இலங்கை அர்ப்பணிக்கும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

“பொருளாதார இலக்குகளை அடைந்துகொள்ளும் அதேவேளை 2040 களில் பசுமை இலக்குகளையும் அடைந்துகொள்ள இலங்கை அர்ப்பணிக்கும். நிகர பூஜ்ஜிய கார்பன் உமிழ்விற்கான உலகின் இலக்கை தேசிய கொள்கையில் உள்வாங்கிய முதலாவது ஆசிய நாடு இலங்கையாகும்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற உலக சுற்றாடல் தின நிகழ்விலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“இந்த வருட, உலக சுற்றாடல் தினம் மிகவும் முக்கியமான நேரத்தில் கொண்டாடப்படுகிறது. உலகளாவிய காலநிலை மாற்றம் குறித்து நாம் கவனம் செலுத்தும் போது, பரிஸ் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலநிலை மாற்றம் தொடர்பான இலக்குகளை அடைவதற்கான நம்பிக்கையை அது நமக்குத் தருகிறது என்றே கூற வேண்டும்.

உலக வெப்பநிலை நாம் எதிர்பார்த்ததை விட ஏற்கனவே உயர்ந்துள்ளது. மேலும், சில அபிவிருத்தியடைந்த நாடுகள் காலநிலை மாற்றத்திற்கு எதிராக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. அந்த இலக்கை அடைய இந்தியா, சீனா, இந்தோனேஷியா போன்ற நாடுகள் கால அவகாசம் தேவை என்று கூறியுள்ளன. மேலும் பெற்றோலிய உற்பத்தி செய்யும் நாடுகளும் உள்ளன.

இவற்றுக்கு மத்தியில் இலங்கை போன்ற சிறிய நாடுகள் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் சிக்கித் தவிக்கின்றன. அதற்கு நாம் இப்போது புதிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். எனவே, சுற்றுச்சூழல் அமைச்சு நிறுவப்பட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பணிகளுடன் நின்றுவிட முடியாது. இந்த இலக்குகளை அடைய, பல புதிய திட்டங்களை செயல்படுத்த வேண்டும். அதற்கான பணியை ஏற்கனவே தொடங்கிவிட்டோம். அதன் முதல் பணி புதிய சட்ட கட்டமைப்பை உருவாக்குவதாகும். நாங்கள் ஏற்கனவே முதல் சட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளோம்.

பொருளாதார பரிமாற்ற சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பொருளாதார மாற்றத்திற்கான தேசியக் கொள்கை (அ) ஐஐ இல் 2050க்குள் நிகர பூஜ்ஜிய கார்பன் உமிழ்வு இலக்கை அடைவது தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, தேசிய கொள்கையில் நிகர பூஜ்ஜிய கார்பன் உமிழ்வு என்ற இலக்கை உள்ளடக்கிய ஆசியாவின் முதல் நாடாக நாம் மாறியுள்ளோம்.

நாட்டின் பொருளாதார இலக்குகளை அடையும் போது இந்த இலக்கை அடைய வேண்டும். 2050 வரை காத்திருக்காமல் 2040க்குள் இந்த இலக்கை அடைவதில் கவனம் செலுத்தியுள்ளோம். அதற்கேற்ப நாம் செயற்பட்டு வருகின்றோம்.

இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட பிறகு, அது தேசிய கொள்கையாக மாறும். அன்றிலிருந்து ஒவ்வொரு நிறுவனமும் அதற்கேற்ப செயல்பட வேண்டும், அரசு சாரா பிரிவுகளும் அதன்படி செயல்பட வேண்டும்.

அத்துடன், மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் தயாரிக்கப்பட்ட சுற்றுச்சூழல் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டியது அவசியமாகும். சுற்றுச்சூழல் சட்டம் 80 களில் தயாரிக்கப்பட்டது. இப்போது நிலைமை அதனை விட மாறிவிட்டது. எதிர்காலத்தில் அந்தத் திருத்தங்களை முன்னெடுக்க நாம் எதிர்பார்க்கிறோம்.

குறிப்பாக, காலநிலை மாற்றச் சட்டம் மற்றும் காலநிலை மாற்றத்திற்கான மையத்தை நிறுவும் சட்டத்தையும் முன்வைக்க நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம். இந்த இரண்டு வரைவுகளும் அமுல்படுத்தப்படும் போது, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான அடிப்படை சட்டக் கட்டமைப்பை இலங்கை கொண்டிருக்கும்.

பசுமைப் பொருளாதாரத்தை உருவாக்குவது தொடர்பாக நிதி அமைச்சில் தனிப் பிரிவை ஏற்படுத்தவும் திட்டமிட்டுள்ளோம். பசுமைப்பொருளாதாரத்திற்கான திட்டங்களுக்கான நிதி பெற்றுக் கொள்ளும் செயற்பாடுகள் அந்த பிரிவு மூலம் நிறைவேற்றப்படும்.

இந்த ஆண்டு இறுதிக்குள் அந்த முழுமையான பொறிமுறையை நாம் எதிர்பார்த்துள்ளோம். மேலும், இந்த சுற்றாடல் கொள்கையின்படி தற்போது தொடங்கப்பட்டுள்ள விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தை செயல்படுத்த அறிவுறுத்தியுள்ளோம். இதன் மூலம் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்துடன் சுற்றுச்சூழல் கொள்கைகளும் கிராமத்திற்கு செல்கிறது. எனவே இந்த வேலைத்திட்டத்தை தேசிய அளவில்

தொடர்ச்சி▼









# 2040 ஆம் ஆண்டில் பசுமை இலக்குகளை அடைந்துகொள்ள இலங்கை அர்ப்பணிக்கும்

தொடர்ச்சி▲

செயல்படுத்துவோம்.

காலநிலை மாற்றத்தினால் முழு உலகமும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள இவ்வாறான வேளையில் இலங்கை போன்ற ஒரு நாடு அமைதியாக இருக்க முடியாது. எனவே, காலநிலை மாற்றம் தொடர்பான மாநாடுகள் (ஊழீ) மற்றும் பிற சர்வதேச அரங்குகளில் சுற்றாடலுக்காக முன்வந்து செயற்படுமாறு வெளியுறவு அமைச்சு மற்றும் சுற்றாடல் அமைச்சுக்கும் நான் தெரிவித்துள்ளேன்.

இங்கு ஒரு முக்கிய விடயமாக காலநிலை மாற்றம் தொடர்பான பல்கலைக்கழகத்தை நிறுவ நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். அது குறித்து பல நாடுகளுடன் கலந்துரையாடியுள்ளமையுடன், இந்தப் பல்கலைக்கழகத்தை அமைப்பதற்காக கொத்மலை பிரதேசத்தில் 600 ஏக்கர் காணியைப் பெற்றுக் கொண்டுள்ளோம்.

எதிர்வரும் மாதத்தில் அது குறித்த சட்ட மூல வரைவுத் தயாரிப்புப் பணிகள் நிறைவடைந்த பின்னர், சம்பந்தப்பட்ட சர்வதேச அமைப்புகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும். அந்தப் பணிகள் முடிந்ததும், அடுத்த ஆண்டு ஜுன் மாதத்திற்கு முன் அதனை சட்டப்பூர்வமாக்க எதிர்பார்க்கின்றோம்.

காலநிலை மாற்றத்திற்கு முகங்கொடுப்பது தொடர்பான சர்வதேச அளவிலான ஆராய்ச்சிக்காக இந்தப் பல்கலைக்கழகத்தைப் பயன்படுத்த எதிர்பார்த்துள்ளோம். மேலும், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளத் தேவையான நிதியைப் பெறுவதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

இதற்கு நிதி இல்லாததால் மூன்றாம் உலக நாடுகள் அவர்களுக்கு நிதியைப் பெற்றுத் தறுமாறு கேட்கின்றனர். எல்லா நாடுகளும் அந்த கோரிக்கை முன்வைப்பதும் பொருத்தமற்றது. இன்று பொருளாதார ரீதியில் பிரச்சினைகளை எதிர்நோக்கும் இலங்கை கூட அவ்வாறு நிதி கேட்பதில்லை.

ஆனால், ஆபிரிக்காவில் பொருளாதார ரீதியாக பின்தங்கிய நாடுகளுக்கு தற்போது திருப்பிச் செலுத்த வேண்டியுள்ள கடன்களை தள்ளுபடி செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளோம். அதற்காக பல நாடுகளுடன் நாம் இணைந்து இருக்கிறோம். மேலும், மேற்கத்திய நாடுகள் மற்றும் வளர்ந்த நாடுகளிடம் இருந்து இந்த விடயத்திற்காக எங்களுக்கு பெற்றுத் தருவதாக வாக்குறுதி அளிக்கப்பட்ட நிதி கிடைக்கவில்லை.

ஆனால், அமெரிக்காவும் ஐரோப்பாவும் இந்த ஆண்டு உக்ரைன் யுத்தத்துக்கு பயன்படுத்திய பணத்தைக் காலநிலை மாற்றத்துக்கு ஈடுகொடுக்க வழங்கியிருந்தால், அந்தப் பணம் இரண்டு ஆண்டுகளுக்குப் போதுமானதாக இருந்திருக்கும். ரஷ்யா செலவழித்த பணம் இன்னும் கணக்கிடப்படவில்லை. மேலும், காஸா போருக்குப் பயன்படுத்தப்பட்ட பணமும், அதற்காக அனுப்பப்பட்ட ஆயுதங்களின் செலவையும் இந்த நடவடிக்கைகளுக்கு வழங்கியிருந்தால், உலகையே மாற்ற முடியும்.

ஆனால், இந்தப் பணம் கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. எனவே, வெப்பமண்டலப் பிரதேசம் என்ற வகையில் எமக்குத் தேவையான பணத்தை நாமே தேடிக்கொள்ள வேண்டும்என இலங்கைமுன்மொழிந்துள்ளது.

குறைந்த வருமானம் கொண்ட ஆபிரிக்க நாடுகளுக்கு நிவாரணம் வழங்குமாறு உலகின் வளர்ந்த நாடுகளை வற்புறுத்தும் அதே வேளை, எமக்குத் தேவையான பணத்தை நாமே தேடிக்கொள்வோம். குறிப்பாக சுற்றுச்சூழல் துறையில் கார்பன் கிரெடிட்டைப் பெற பல நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.எனவே நமது நாடுகளில் கார்பன் கிரெடிட் பெறக்கூடிய திட்டங்களை தொடங்க வேண்டும். இதற்காக வெப்ப மண்டலப் பகுதியை ஒதுக்கியுள்ளோம். அந்தந்த நாடுகள் அதற்காக செயற்பட்டால், எமக்குத் தேவையான தொகையில் ஒரு பகுதியைப் பெறும் திறன் நமக்கு உள்ளது. உலகின் காலநிலை மாற்றத்தின் ஒரு பகுதியை அதற்கேற்ப கட்டுப்படுத்த முடியும்.

பிரேசிலின் அமேசான் நதிப் பள்ளத்தாக்கு மற்றும் அதைச் சுற்றியுள்ள பாரிய காடுகள் பாதுகாக்கப்பட வேண்டும். மேலும், இதன் போது இந்து சமுத்திரத்தின் வகிபாகம் குறித்தும் நாம் கலந்துரையாடி வருகின்றோம். அதன்படி, காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழலைக் கையாள்வதில் இலங்கையின் வகிபாகம் பாரம்பரியத்துடன் மட்டுப்படுத்தப்படவில்லை. நாம் இன்னும் முன்னோக்கிச் சென்று பொருளாதாரக் கொள்கை மற்றும் வெளியுறவுக் கொள்கையிலும் இதனைச் சேர்க்க வேண்டும்." – என்றார்.



# இன்றைய ராசி பலன்கள் - 06.06.2024




இன்றைய நாளை சாதகமாக்கிக் கொள்ள நீங்கள் மிகவும் முயற்சி எடுப்பீர்கள். உங்கள் மனது அமைதியாக இருக்கும். உங்கள் இலக்கில் கவனம் செலுத்த இயலும்.

பணிநிமித்தமான பயணங்கள் ஏற்படும். உங்கள் பொறுப்புகளை முறையாக ஆற்றுவீர்கள்.

நல்ல சுமுகமான உறவுமுறை காணப்படும். உறவுப் பிணைப்பின் மதிப்பை நீங்கள் உணர்வீர்கள்.

குடும்பத்தில் விசேஷங்கள் நடக்க வாய்ப்பு உள்ளது. அதற்காக பணத்தை செலவு செய்வீர்கள். அது உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும்.

உங்கள் அமைதியான மனநிலை காரணமாக மிகவும் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




ஒரு சாதகமான நாள் உங்கள் முன் இருக்கின்றது. இன்று அமைதியான மனநிலையுடன் காணப்படுவதால் முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள். இன்று மாற்றங்கள் ஏற்படலாம். அது உங்களுக்கு நன்மையை அளிக்கும்.

இன்று பணிச்சுமை உங்களுக்கு மனஅழுத்தத்தை உண்டாக்கும். உங்கள் பணியின் தரம் குறைவாக இருக்கும்.

குடும்பத்தில் நல்லுறவு காணப்படும். குடும்பத் தாருடன் இனிமையாகப் பேசி பழகுவீர்கள்.

பணம் அதிகமாக காணப்படும். பயனுள்ள நோக்கங்களுக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

மகிழ்ச்சியான மனநிலை உங்களை ஆரோக் கியமாக வைத்திருக்கும்.தியானம் மேற்கொள்வது உங்களுக்கு மிகவும் நல்லது.




இன்று சௌகரியங்கள் குறைந்து காணப்படும். இன்று சில பொறுப் புகளை உங்களால் செய்ய முடியாமல் போகலாம்.

நீங்கள் பணியில் பிரகாசிப்பீர்கள். உங்கள் பணி உங்கள் மேலதிகாரிக ளால் பாராட்டப்படும்.

உணர்ச்சிவசப்படுவதன் காரணமாக தேவையற்ற வாக்குவாதங்கள் ஏற்பட வாய்ப்பிருக்கும். எனவே நல்லுறவை தக்க வைக்க கவனமாக இருக்க வேண்டும்.

பணஇழப்புக்கு வாய்ப்பிருப்பதால் பணத்தைக் கவனமாகக் கையாள வேண்டும்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனமாக இருங்கள். தொண்டை வலி அல்லது கண்களில் எரிச்சல் ஏற்படலாம்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் உங்கள் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள்.

உங்கள் பணிகளில் தாமதம் ஏற்படும். பணிகள் சுமுகமாக நடைபெற நீங்கள் மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டும்.

குடும்ப வட்டாரத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் காணப்படும். விருந்தினர்களின் வருகை உற்சாகத்தைத் தரும்.

இன்று பணத்தை சேமிப்பதற்கும் முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கும் உகந்த நாள். ஸ்திரமான நாளாக அமையும்.

இன்றைய நாள் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும். நீங்கள் ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




இன்று அர்ப்பணிப்புடன் செயல்ப டுவீர்கள் உங்கள் நலன் பெருகும். இன்று பயணங்கள் காணப்படும்.

இன்று பணிச்சூழல் நன்றாக இருக்கும். மேலதிகாரிகள் உங்கள் திறமைகளை மதிப்பிடுவார்கள்.

இன்றைய தினம் காதலுக்கு உகந்த நாள் அல்ல. நீங்கள் மகிழ்ச்சியைத் தேடுவீர்கள்.

இன்று பண இழப்புக்கு வாய்ப்பு உள்ளது. அதனால் சில ஏமாற்றங்களை சந்திக்க நேரும். எனவே கவனமாக இருக்க வேண்டும்.

இன்று ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும். சளி இருமல் போன்ற உபாதைகளுக்கு ஆளாக நேரலாம்.




இன்று உங்கள் எண்ணங்கள் ஈடேறும். இன்று அதிர்ஷ்டங்களை சந்திப பீர்கள்.

பணியின் மீதான உங்கள் அர்ப் பணிப்பு காரணமாக உங்கள் மேலதி காரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். உங்களின் சிறந்த பணி காரணமாக பதவி உயர்வுக்கான வாய்ப்பு உள்ளது.

பெரியவர்களிடமிருந்து இன்று அறிவுரை ஒன்றை கேட்க நேரும். நல்லுறவுக்கு அது பயனளிக்கும். குடும்பம் மகிழ்ச்சியாக இருக்கும்.

இன்று நிதி வளர்ச்சி அபாரமாக இருக்கும். ஆன்மீக நோக்கங்களுக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

ஆரோக்கியம் மிகச் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்கள் செயல்களில் கவனம் தேவை.

உங்கள் சகபணியாளர்கள் மற்றும் கீழ்ப் பணி புரிபவர்களின் ஆதரவு உங்களுக்கு நம்பிக்கை அளிக்கும் மற்றும் நற்பெயர் கிடைக்கும்.

குடும்ப அங்கத்தினர்களிடம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த வேண்டும். மோதல்களுக்கு வாய்ப்பு உள்ளது.

பணத்தை கையாள்வதில் கவனம் தேவை. அலட்சியமாக இருந்தால் பணஇழப்பு ஏற்படும்.

ஆரோக்கியம் குறைந்து காணப்படும். உங்கள் உணவில் கவனம் செலுத்துங்கள். குளிர்ச்சியான உணவுகளைத் தவிர்த்துவிடுங்கள்.




இன்றையநாள் சமநிலையுடன் காணப்படும். உங்கள் அணுகுமுறை மூலம் நீங்கள் புதிய தொடர்புகளை பெறுவீர்கள்.

இன்றை பணியின் மூலம் நீங்கள் நற்பலன்களைப் பெறுவீர்கள். இது உங்கள் தகுதியை நிரூபித்துக் காட்டும்.

உறவில் அமைதியும் மகிழ்ச்சியும் காணப்படும். நண்பர்கள் உங்களுக்கு நல்லாதரவு தருவார்கள்.

இன்று நிதிவளர்ச்சி நன்றாக இருக்கும். உங்கள் நண்பர்களின் பிறந்த நாள் போன்ற விசேஷங்களுக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் திருப்தியாகவும் சந்தோஷமாகவும் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 06-06.2024




இன்றைய நாளில் எதிர்பாராத மாற்றங்கள நிகழும். முயற்சிகளை சார்ந்து செயல்படுவது நல்லது.

பணியிடத்தில் நற்பெயரைப் பெறுவீர்கள். விரும்பி பணியாற்றுவீர்கள்.

குடும்பத்தாருடன் நல்லுறவு பராமரிப்பதற்கு உகந்த நாள். காதல் ஜோடிகள் இன்று பரஸ்பர ஒற்றுமையுடன் இருப்பார்கள்.

எதிர்பாராத வகையில் பணவரவு காணப்படும். பூர்வீகச் சொத்து, காப்பீடு அல்லது லாட்டரி மூலம் பணம் கிடைக்கலாம்.

இன்றைய நாள் நல்ல ஆரோக்கியத்தை நீங்கள் அனுபவிப்பதற்கு உதவியாக இருக்கும். நீங்கள் கவனிக்க வேண்டிய ஒரே விஷயம் நீங்கள் உண்ணும் உணவு முறைகள்.




இன்று அன்பும் ஆர்வமும் நிறைந் திருக்கும். நல்ல பாடல்களைக் கேட்டு மகிழுங்கள். விளையாட்டில் நேரத்தை கழியுங்கள்.

பணியிடச் சூழல் சுமுகமாக இருக் காது. அனுசரித்து நடந்து கொண்டால் உங்கள் பணிகள் பாதிக்காது.

காதலுக்கு உகந்த நாள்.காதல் ஜோடிகள் உறவில் ஒற்றுமை கண்டு மகிழ்வார்கள்.

நிதி விஷயங்களில் வளர்ச்சி காணப்படும்.பங்குச் சந்தையில் பணத்தை முதலீடு செய்வதன் மூலம் நல்ல லாபம் பெறுவீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும். ஆரோக்கியக் குறைபாடுகள் காணப்படாது.




திறமையான முறையில் செயலாற்ற உங்களுக்கு பொறுமையும் உறுதியும் தேவை.

பணி செய்வதற்கான திறமை உங்களி டம் காணப்படும் போதிலும் சிறந்த திட்ட மிடல் இல்லாத காரணத்தால் அதனை நீங்கள் வெளிப்படுத்த இயலாது. எனவே கவனமாக பணியாற்ற வேண்டும்.

குடும்பத்துடன் அனுசரித்துச் செல்ல வேண்டியது அவசி யம்.குடும்பத்தின் அமைதி சூழலை கெடுக்கும் வகையில் வாக்குவாதம் ஏற்பட வாய்ப்புள்ளது.

பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் குடும்ப உறுப்பினர்களின் உடல் நலத்துக்காகப் பணத்தைச் செலவு செய்ய நேரலாம்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். உடல் நலத்தில் நீங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.




இன்றைய நாள் உங்களுக்குச் சாதகமாக இருக்கும். சுய வளர்ச்சிக்காக தொடர்ந்து முயன்றால் இன்று வெற்றி கரமான நாளாக ஆக்கலாம்.

பணியில் பலன்கள் கலந்து காணப் படும். ஏற்ற இறக்கங்கள் காணப்படும். மேலதிகாரிகள் மற்றும் சகபணியாளர்களுடன் உறவாடும் பொழுது கவனமுடன் இருக்க வேண்டும்.

குழந்தைகளின் முன்னேற்றமும் வளர்ச்சியும் உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். உடன்பிறந்தோரின் ஆதரவு கிடைப்பதற்கு சாத்தியம் உள்ளது.

இன்று நிதிவளர்ச்சிக்கு உகந்த நாள். இன்று நிதி சம்பந்தமாக முக்கியமான முடிவுகளை எடுப்பது பயனுள்ளதாக இருக்கும். இன்று சிறந்த ஆரோக்கியத்தின் காரணமாக மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.





